**செ.வெ.எண்-61** **நாள்-23.02.2021**

**அரியலூர் மாவட்டம்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிய துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகம் கட்டிடத்தினையும், ஓட்டுநர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் மற்றும் ஓடுதளத்தினையும் காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.**

அரியலூர் மாவட்டம், அரியலூர் பல்துறை அலுவலக வளாகத்தில் ரூ.1.12 கோடி மதிப்பில் புதிய துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகம் கட்டிடத்தினையும், ரூ.66 இலட்சம் மதிப்பீட்டில் கீழப்பழூர் ஊராட்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் ரூ.66 இலட்சம் மதிப்பில் ஓட்டுநர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் மற்றும் ஓடுதளத்தினையும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள்** இன்று (23.02.2021) காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி, புதிய கட்டிடத்தினை பார்வையிட்டு, கட்டிட வளாகத்தில் நிழல் தரும் மரக்கன்றுகளை நட்டு, ஓட்டுநர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி மைய ஓடுதளத்தில் வாகனத்தில் சென்று பார்வையிட்டார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவத்துறைக்கு பல எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்திவருகிறார்கள். அதன்படி, ரூ.347 கோடி மதிப்பில் 150 மருத்துவ மாணவர்களுக்கான 700 படுக்கைகள் வசதிகளுடன் அரசு மருத்துவக்கல்லூரி அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும், கிராம சுகாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, அரியலூர் பல்துறை அலுவலக வளாகத்தில் பொதுப்பணித்துறை மருத்துவப்பணிகள் சார்பில் ரூ.1.12 கோடி மதிப்பில் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகம் கட்டும் பணி செயல்படுத்தப்படவுள்ளது. இக்கட்டிடம் 5562 ச.அடி பரப்பளவில் கட்டபட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று (23.02.2021) காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். இக்கட்டிடத்தில் துணை இயக்குநர் அறை, பயிற்சி மருத்துவ அலுவலர் அறை, சுகாதார ஆய்வாளர் அறை, இளநிலை பூச்சியியல் வல்லுநர் அறை, நல கல்வியாளர் அறை, புள்ளியியல் உதவியாளர் அறை போன்ற அறைகள் அமைக்கப்பட்டுள்ளது.

கீழப்பழூர் ஊராட்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துறையின் சார்பில் ரூ.66 இலட்சம் மதிப்பில் புதியதாக பணியில் சேரும் ஓட்டுநர்கள் சிரமமின்றி பயிற்சி எடுப்பதற்கு ஏதுவாக 6 ஏக்கர் நிலப்பரப்பில் ஓட்டுநர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் மற்றும் ஓடுதளம் அமைக்கப்பட்டு, கட்டுமானப்பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது. எனவே, அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் இச்சேவையினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த்காந்தி, கோட்டாட்சியர் ஏழுமலை, வட்டார போக்குவரத்து அலுவலர் கோட்ட மேலாளர் ராமநாதன், கிளை மேலாளர் ராஜா, மோட்டார் வாகன ஆய்வாளர் செல்வராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**